திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதி கதை - 18.1.2026

உதவி..!

அன்று கனமழை.
வானம் முழுவதும் கருமேகங்கள் சூழ, சாலைகள் நீரால் நிறைந்திருந்தன.

ஒரு ஆட்டோக்காரர், கர்ப்பிணி பெண்ணை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார். இடியோடு மழை கொட்டிக் கொண்டிருக்க,

அவர் தன் கையிலிருந்த குடையை அந்தப் பெண்ணிடம் நீட்டி, "இதை எடுத்துக்கிட்டு போங்கம்மா" என்கிறார்.

அந்தப் பெண் தயங்கி நிற்கிறாள்.

"அண்ணா... இதை நான் எப்படி உங்களுக்கு திருப்பிக் கொடுக்கப் போறேன்?" என்று கேட்கிறாள்.

அதற்கு அந்த ஆட்டோக்காரர் அமைதியான புன்னகையுடன், "திருப்பிக் கொடுக்க வேண்டாம். வேற யாருக்காவது தேவைப்படுறவங்களுக்கு கொடுத்துருங்கம்மா" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிடுகிறார்.

குடையைப் பிடித்தபடி மருத்துவமனை வாசலுக்குள் செல்லும் போது, அங்கே ஒரு முதியவர் மழைக்கு அஞ்சி, கைகளைக் கட்டிக்கொண்டு நனைந்தபடியே நின்றிருக்கிறார்.

அந்த கர்ப்பிணி பெண் உடனே குடையை அவரிடம் நீட்டி, "ஐயா... இதை எடுத்துக்கிட்டு போங்க." என்றாள்.

முதியவர் வியப்புடன் கேட்கிறார், "அம்மா... நீங்க யாருன்னே எனக்குத் தெரியாது. இந்தக் குடையை நான் எப்படி உங்ககிட்ட திருப்பிக் கொடுக்கப் போறேன்?" என்று.

அவள் சற்றே புன்னகைத்துக் கொண்டே, "அதெல்லாம் வேண்டாம் ஐயா... வேற யாருக்காவது தேவைப்படுறவங்களுக்கு கொடுத்துருங்க." என்று சொல்லிவிட்டு, அவள் தன் வழியே செல்கிறாள்.

முதியவர் குடையை எடுத்துக்கொண்டு பேருந்து நிலையம் நோக்கிச் செல்கிறார். பேருந்து வந்து நின்றதும், ஏறுவதற்கு முற்பட்டபோது அவர் கண்களில் ஒரு காட்சி படுகிறது.

ஒரு பூக்கார அம்மா, பூக்களை அருகில் வைத்துக்கொண்டு, மழையிலிருந்து தப்பிக்க ஒரு சிறிய அட்டையைத் தலைக்கு மேல் பிடித்தபடி அமர்ந்திருக்கிறார்.
ஒரு நொடியும் யோசிக்காமல், முதியவர் குடையை அந்தப் பூக்கார அம்மாவின் கையில் கொடுத்துவிட்டு, பேருந்தில் ஏறிச் சென்று விடுகிறார்.

அந்த பூக்கார அம்மா குடையைப் பிடித்தபடி வீடு திரும்பும் போது, அவள் வீட்டருகே ஒரு பள்ளி மாணவி, புத்தகப் பையைச் சுமந்தபடி, மழையில் சற்றே நனைந்தபடி ஓடிவருகிறாள்.

*வீட்டு வாசலில் அந்த சிறுமியின் தந்தை பதற்றத்துடன் காத்துக்கொண்டு இருக்கிறார்.*

*பூக்கார அம்மா உடனே தன் கையில் இருந்த குடையை அந்தச் சிறுமியிடம் கொடுத்து, "மழையில் நனைஞ்சிடாதம்மா... இதை எடுத்துக்கிட்டு போ" என்று சொல்கிறாள். அந்தச் சிறுமியும் அந்த குடையுடன் முழுவதுமாக மழையில் நனையாமல் பாதுகாப்பாக வீட்டிற்குச் ஓடுகிறாள்.*

*வாசலில் நின்றிருந்த சிறுமியின் தந்தை வேறுயாருமில்லை... ஆமாம், அவர் தான் ஆரம்பத்தில் குடையை கொடுத்த அதே ஆட்டோக்காரர்.*

*பிறருக்கு உதவி செய்வது ஒரு சிறிய செயலாக தோன்றலாம். ஆனால், அந்த சிறு செயல் வாழ்க்கையை மகிழ்ச்சியாலும் சுவாரஸ்யத்தாலும் நிரப்பும் வல்லமை கொண்டது.*

* * *